# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்,100 அண்ணா சாலை , கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி:044–22201337
மின்னஞ்சல் முகவரி:ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 780/2016/பே-3
ஆணை எண்: 204 /2016
நாள்: 22/12/2016

திரு. எஸ். பிரின்ஸ்,
10-5, ஆசாரி தெரு,
மணவாளக் குறிச்சி – 629 252.

– முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மணவாளக் குறிச்சி பேரூராட்சி,
கன்னியாகுமரி – 629 252.

– எதிர் மனுதாரர்

## ஆணை:

முறையீட்டு மனுதாரர் திரு. பிரின்ஸ் தனது ஊர் பொது மக்கள் சார்பாக 11.08.2016 நாளிட்ட கடிதத்துடன் உரிய படிவத்தில் முறையீட்டு மனுவினை தாக்கல் செய்தார். அவரது முறையீடு எண்.780/2016 ஆக பதிவு செய்யப்பட்டது.

மனுதாரர் தனது 11.08.2016 நாளிட்ட முறையீட்டு மனுவில், மணவாளக்குறிச்சி பேரூராட்சிக்கு சொந்தமான மீன் சந்தையில் உள்ள கழிவுநீர், அதன் அருகிலுள்ள புதுக்கடைத் தெரு மற்றும் ஆசாரி தெருவிலுள்ள வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுகள் எல்லாம் ஆசாரிமார் தெருவில் அமைக்கப்பட்டிருக்கும் கழிவுநீர் அங்கேயுள்ள ஓடையில் சேர்ந்து, 11வது வார்டில் உள்ள வாய்க்காலில் வந்து சேர்கிறது என்றும், மேற்படி வாய்க்காலானது, பேச்சிப்பாறை அணையிலிருந்து விவசாயத்திற்காக திறந்துவிடப்படும் வாய்க்கால் என்றும், அந்த தண்ணீர் விவசாயத்தோடு மக்கள் குளிப்பதற்காகவும் மற்ற பிற அடிப்படை தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது என்றும், மேற்படி கழிவுநீர் அந்த வாய்க்கால் தண்ணீருடன் கலப்பதால், பொது மக்களுக்கு சுகாதார கேடு ஏற்பட்டு, பல வியாதிகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் எனத் தெரிவித்து, தக்க நடவடிக்கை மேற்கொண்டு, சுகாதார சீர்கேட்டை சரி செய்யுமாறு முறையீட்டுள்ளார்.

இம்முறையீட்டு மனு குறித்து முறை மன்ற நடுவ அறிவிப்பாணை எண்.780/16/பேரூ நாள்:18.8.2016 வாயிலாக விளக்க அறிக்கை சமர்ப்பித்திட செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. செயல் அலுவலர் க.எண்171/2016 அ2 நாள்: 19.09.2016 நாளிட்ட கடிதத்தில் தனது விளக்க அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். அதில் மணவாளக்குறிச்சி பேரூராட்சிக்கு சொந்தமான மீன் சந்தையில் கழிவுநீர் சேகரிக்கும் தொட்டி புதியதாக அமைக்கப்பட்டு வருகிறது என்றும், அதனால் மீன் சந்தையிலுள்ள கழிவுநீர் அருகிலுள்ள வடிகாலில் கலக்காது என்றும், ஆசாரி தெரு வடிகாலிலுள்ள மண் முழுவதும் அகற்றப்பட்டு வடிகால் சுத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து அதற்கான நிழற்படங்களையும் சமர்ப்பித்திருந்தார். வீட்டுக்கழிவு நீரினை மழைநீர் வடிகாலில் விடாமலிருக்க வீட்டு உரிமையாளர்களுக்கு தக்க அறிவுரை வழங்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

இப்புகார் மனு தொடர்பாக 08.12.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு முறைமன்ற அறிவிப்பாணை எண். 780/16 நாள்: 8.11.2016ன் வாயிலாக முறையீட்டு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது.

08.12.2016 அன்று நடைபெற்ற விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

"நான், இந்த மனுவோடு பல அலுவலர்களுக்கும் அனுப்பியிருந்தேன். யாரும் உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை. குளத்தில் நீர் நிரம்பியவுடன் வாய்க்கால் வழியாக சிற்றாறை அடைந்து கடலுக்கு செல்கிறது. அந்த கால்வாயில் இருந்து வரும் தண்ணீர் குளிப்பதற்கும், பாசனத்திற்கும் பயன்பட்டது. இப்போது அந்த வாய்காலில் தண்ணீர் வரவில்லை. ஓடை தண்ணீரில் ஒவ்வொரு வீட்டிலுள்ள கழிவுநீரும் சேர்வதால் சுகாதார கேடு ஏற்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு மனு செய்த பின்பு மீன் சந்தை கழிவுநீர் வடிகாலில் சேராமல் இருக்க பேரூராட்சியால் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. வீடுகளிலிருந்து வரும் கழிவுநீரை அகற்ற நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, அதை செய்து தர உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் இணைப்புகள், செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மீன் சந்தையின் கழிவுநீர் கால்வாயில் கலக்காதவாறு சந்தையில் தொட்டி கட்டும் பணி நடைபெறுகின்றது. இதனை மனுதாரரும் நேரடி விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். ஆசாரித் தெரு கால்வாயில் தேங்கியுள்ள மணல் மற்றும் கழிவுகளை அகற்றும் பணி நடைபெறுகின்றது. இதற்கான அத்தாட்சிகளும் (புகைப்படங்கள்) இணைக்கப்பட்டிருந்தன. ஆனால் வீடுகளிலிருந்து வரும் கழிவுநீரினை வாய்க்காலில் விடவேண்டாம் என வீட்டு உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரம் மற்றும் கொசு மருந்து அடித்ததற்கான ஆதாரங்கள் ஏதும் செயல் அலுவலரால் சமர்ப்பிக்கப்படவில்லை. வீட்டுக் கழிவுகளை மக்கள் பயன்பாட்டிற்கு பயன்படும் தண்ணீர் போகும் வாய்க்காலில் விடுவது விரும்பத்தக்கது அல்ல. எனவே, மக்களின் சுகாதாரம் பேண அவ்வப்போது கொசு மருந்து மற்றும் பிளிச்சிங் பவுடர் தெளிக்க வேண்டுமெனவும், மக்கள் பாசனத்திற்கும், குளிப்பதற்கும் பயன்படுத்தும் வாய்க்காலில் வீட்டுக் கழிவுகளை விடாமலிருக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மணவாளக்குறிச்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2016—ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22-ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//—

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

29/12/16

செயலாளர்.

28.12.16

29/12/16

பெறுநர்

1. திரு. எஸ். பிரின்ஸ்,
   S/o. சத்திய நேசன்,
   10-5, ஆசாரி தெரு, மணவாளக் குறிச்சி மற்றும் அஞ்சல்,
   கன்னியாகுமரி மாவட்டம் – 629 252.

2. செயல் அலுவலர்,
   மணவாளக் குறிச்சி பேரூராட்சி,
   கன்னியாகுமரி மாவட்டம் – 629 252.